# 2018ம் ஆண்டு மாசி மாத இறைவேண்டலுக்கான கைக்கொடுத்தல்

## *“கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களிலும் இருக்கட்டும்”*

(பிலிப்பியர் 2:5)

இயேசுக்கிறிஸ்து ஆண்டவரின் மனநிலையானது அப்பா பிதாவினது பரிசுத்தமான திருவுளத்திற்கு இடமளித்து அவரது குரலுக்கு செவிசாய்த்து செபத்திலும், கண்ணீர் விட்டு மன்றாடியவாறு உடல், உலகம், பசாசு எனும் அனைத்து சத்துருக்களின் ஆதிக்கத்திலிருந்து மனிதனை பாதுகாத்து அனைத்துலக மக்களுக்கும் பரலோகத்திற்கு உள்ளாவதற்கான கதவை திறந்துகொடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாகும்.

அந்த செயல்பாடு பூரணமடைந்திட அவரதுபாடுகள், மரணம் மற்றும் உயிர்ப்பினூடாக அனைத்து மக்களுக்கும் அதிர்'டம் ஏற்பட்டது.

இறைவேண்டல் ஊழியர்கள் என்றரீதியில் இம்மாதம் முழுவதும் இயேசுக்கிறிஸ்து ஆண்டவரின் மனநிலையை எமது நிலைப்பாடாக்கிக்கொண்டு தூய ஆவியானவரின் துணையோடு உடல், உலகம், பசாசுக்கு அடிமைபட்டிருக்கும் அனைத்து மக்களுக்காகவும் முறையிட்டு செபித்தவாறு அதற்கு சாட்சியளித்தவாறு முன்னோக்கி செல்வதற்கு முனைவோம்.

**அவ்வாறே எமது இறைவேண்டல் குழுக்களில் புபுது இறைவாக்கினர் குழு இக்காலத்தில் ஆரம்பித்துள்ள 2018 தை மாதம் 07ம் திகதிமுதல் 2018 சித்திரை மாதம் 01ம் திகதிவரை (உயிர்த்த ஞாயிறு) மு.பகல் 6.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை இடம்பெறும் பேறுபெற்ற தாயாருடன் நடுநிலைவகித்து செய்யும் சங்கிலித் தொடர் செபத்தினை உதவியாக்கிக் கொள்வோம். (காலத்திற்கேற்ப புபுது செபமாலை அல்லது சாதாரண செபமாலையை உதவியாக்கிக் கொள்வோம்)**

**“ஏனெனில் நாம் மனிதர்களோடு மட்டும் போராடுவதில்லை ஆட்சி புரிவோர், அதிகாரம் செலுத்துவோர், இருள் நிறைந்த இவ்வுலகின் மீது ஆற்றல் உடையோர், வான்வெளியிலுள்ள தீய ஆவிகள் ஆகியவற்றோடும் போராடுகின்றோம்.” (எபேசி 6:12)**

**நடுநிலை வேண்டல்**

- நமஸ்காரம்
- விசுவாச மந்திரம்
- முதலாம் காரணிக்கம் - இறை ஊழியர் அதி மேதகு தோமஸ் குரே கர்தினால் ஆண்டகையை புனிதத்துவத்திற்கு உயர்த்துவதற்காக வேண்டி
- இரண்டாம் காரணிக்கம் - அதி மேதகு கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை உள்ளிட்ட அனைத்து ஆயர்கள் குழு, மற்றும் அனைத்து குருக்களுக்காகவும் வேண்டி
- மூன்றாம் காரணிக்கம் - சுவாமிஅப்பா உள்ளிட்ட அனைத்து இறைவாக்கினர்களுக்காகவும் வேண்டி
- நான்காம் காரணிக்கம் - அனைத்து புபுது பொதுமக்களுக்காகவும் வேண்டி

- ஐந்தாம் காரணிக்கம் - முழு உலக மக்களதும் புபுது பயணத்திற்காகவும் மற்றும் மனஸ்தாபத்தின் ஆண்டுகள் நான்கிற்காகவும் வேண்டி

**முதலாம் வாரம் - தியானவாசிப்பு பிலிப்பியர் 2: 1-11**

வேண்டுதலுக்கான விசேட நோக்கு–

- முதலாம் ஞாயிறு நடைபெறும் சங்க தினத்திற்காகவும் வார்த்தையின் ஊழியருக்காகவும்
- மாசி மாதம் 2ம் திகதி நடைபெறும் சுவாமி அப்பாவின் குருத்துவதினத்திற்காகவும் வேண்டி
- மாசி மாதம் 10ம் திகதி நடைபெறும் பிரதேச சபை தேர்தல் அமைதியான முறையில் நடக்கவும் ஊழல்வாதிகளல்லாத தகுதியான வேட்பாளர்கள் தெரிவாகவுதற்காக
- ஏனைய வேண்டுதல்கள்…….

**இரண்டாம் வாரம் - தியான வாசிப்பு பிலிப்பியர் 1:27-29**

வேண்டுதலுக்கான விசேட நோக்கு

மாசி மாதம் 14ம் திகதி விபூதிப் புதனில் ஆரம்பமாகும் தவக்காலத்தை ஆழ்ந்த பச்சாதாபத்திலும் மற்றும் மனஸ்தாபத்திலும் கழிப்பதற்கு அனைத்து கிறிஸ்தவ மக்களுக்கும் தூயஆயியானவரின் வரம் கிடைப்பதற்காக

- வேறு வேண்டுதல்கள்…………

**மூன்றாம் வாரம் - தியான வாசிப்பு பிலிப்பியர் 3: 7-11**

வேண்டுதலுக்கான விசேட நோக்கு

ஊர்ஊராகச் சென்று தூதுச் சேவையில் ஈடுபடும் குழுவினர்களுக்காக (10நிமிடம்)

- வேறு வேண்டுதல்கள்

**நான்காம் வாரம் - தியான வாசிப்பு பிலிப்பியர் 2: 12-17**

வேண்டுதலுக்கான விசேட நோக்கு

நம் தேசத்தை முன்கொண்டு (20 நிமிடங்கள்)

- வேறு வேண்டுதல்கள்

## *ஏனைய விசேட வேண்டுதல்கள்….*

- கடந்த நாள் எம்மிடையிலிருந்து தேவதாயின் அரவணைப்பிற்குள் சென்ற மாரவில சீடத்துவ சங்க இறைவேண்டல் குழுக்களில் சம்பந்தப்பட்டிருந்த மர்லின் அம்மாவின் ஆத்துமத்திற்காக வேண்டி
- 2018 தை மாதம் 07ம் திகதியிலிருந்து குரன போலவலான சதாசகாயமாதா ஆலயத்தில் ஆரம்பித்துள்ள புபுது உட்புகும் உரைகளில் கலந்து கொள்ளும் அனைத்து மக்களுக்காகவும் வார்த்தையின் ஊழியர்களுக்காகவும்

❖ இறை வேண்டல் துணையாளர் குழுவில் செயல்படும் இரனவில பிரேமசிறி அப்பாவின் நோயில் அவருக்கு தெய்வீக சுகம் கிடைக்குமாறும் நெடு நாட்களாக நோயினால் பீடிக்கப்பட்டிருக்கும் அவரது மனைவியின் நலத்துக்காகவும்
❖ 2018 தை மாதம் 14 – 2019 தை மாதம் 20 வரைக்கும் கொழும்பு ஆயர் பேரவையால் முன் வைத்திருக்கும் ‘‘எனது இதயத்திற்கு பிரியமான ஆயர்களை நான் உனக்குத் தருவேன்’’ எனும் தலைப்பின் வழியாக தொடங்கியுள்ள நல்லாயன் வருடத்திற்காக

‘‘எனது பெயரைப் போற்றிடும் என் மக்கள் சிறுமையுற்று பாவங்களிலிருந்து மனம் வருந்தி இரந்து மன்றாடி, என் திருமுகத்தை நாடினால், வானகத்திலிருந்து அவர்களது மன்றாட்டுக்களைக் கேட்டு அவர்கள் பாவங்களை மன்னிப்பேன். அவர்களது நாட்டுக்கு நலன் அளிப்பேன்’’ (2குறிப்பேடு 7:14)

இறைவேண்டல் மற்றும் நடுநிலை சேவை